**<u>அசல் வழக்கு எண். 125/2019</u>**

**<u>11.02.2026</u>**

**பெயர் – காளிமுத்து** (DW –2)

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(1) இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை பெறவில்லை பிரதிவாதி எனக்கு தெரிந்தவர் என்பதால் சாட்சியம் அளிக்க வந்தேன். குறிப்பாக எந்த தேதியில் அழைத்தார் என்று ஞாபகம் இல்லை. சாட்சியம் அளிக்க முதல் விசாரணை சமயத்தில் தான் வழக்கு விவரங்கள் தெரியும். நான் ரியல் எஸ்டேட் செய்து வருகிறேன். பிரதிவாதிகளுக்கு வீட்டு மனைகள் வாங்கி கொடுத்துள்ளேன். வாதியை தெரியும் பெரிய பழக்க வழக்கம் பேச்சு வார்த்தை இல்லை. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் யார் சொல்லியது என்றால் வெள்ளைச்சாமி சொல்லி தெரியும். அவர் தயார் செய்து சாட்சியம் அளிக்க கேட்டுக்கொண்டதால் சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். வாதி, பிரதிவாதிகள் ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு பற்றிய நேரடியாக எதுவும் தெரியாது. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும் பிரதிவாதிகளால் தயார் செய்யப்பட்டு இருந்ததை கையொப்பம் போட்டேன். பிரதிவாதிகளுக்கு இடம் வாங்கி கொடுத்த பழக்க வழக்கத்தின் காரணமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.02.11 18:39:03 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்